கூட்டம் எண். 21 செங்கல்பட்டு நகராட்சி

நாள்.07.07.2025

**குறள் :** இன்சொலால் ஈத்து அளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டுஅனைத்துஇவ் உலகு.

**தெளிவுரை:** இனிமையான சொல்லோடு துன்புறுவோர்க்கு வேண்டியதைக் கொடுத்துக் காப்பாற்றவல்ல அரசன் தன் மனத்தில் கருதியவாறே உலகமும் அமையும்.

## அவசரக் கூட்டம்

**2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08 ஆம் தேதி (08.07.2025 ) செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் அவசரக் கூட்டம் நகரமன்ற தலைவர் திருமதி.தேன்மொழி நரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் துணைதலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

07/07/2025

நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி

**பொருள் எண்.1**

வட்டாட்சியர் செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் கடிதத்தில் சிறப்பு வரன்முறைபடுத்தும் திட்டத்தின் கீழ் வீட்டு மனை பட்டா வழங்க கீழ்கண்ட இடங்களுக்கு செங்கல்பட்டு நகராட்சியின் தடையின்மை கோரப்பட்டுள்ளது..

| வ. எண் | செங்கல்பட்டு மாவட்டம் | செங்கல்பட்டு வட்டம் | செங்கல்பட்டு நகரம் / கிராமம் | புல எண் | விஸ்தீர்ணம் | வகைபாடு |
|---|---|---|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | செங்கல்பட்டு குண்டூர் | நகரளவை எண். 689/2 (ம) 687 வார்டு 3, பிளாக் எண். 14 A | 0. 84. 95 ச.மீ | ச.புற (சுடுகாடு, கல்லாங் குத்து) |
| 2. | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | அனுமந்தபுத்தேரி | வார்டு 5, பிளாக் எண் 13, நகரளவை எண் 1. 2, 3, 4 | 0. 7971. 5 ச.மீ, 0. 6008. 0 ச. மீ, 0.7000. 0 ச.மீ, 0. 7474 .0 ச. மீ | ச. புற (பாட்டை). ச. புற (கல்லாங் குத்து), ச. புற (கல்லாங் குத்து), ச. புற (பாட்டை) |
| 3. | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | வார்டு 2, பிளாக் எண். 2 நகரளவை எண். 392/1 , 428/2 (ம) 494/1A1 | 1. 5466. 0 ச.மீ, 0.175.0ச.மீ, 2.2450.0 ச .மீ | ச. புற (நகராட்சி பூங்கா). ச. புற (முனிசிபல் பூங்கா), அ. புற (நகராட்சி பூங்கா), |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | அனுமந்தபுத்தேரி | வார்டு 5, பிளாக் எண். 5, நகரளவை எண். 45 | 0.19.00 ச, மீ | ச. புற (ருத்ர பூமி). |
| 5. | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | நத்தம்-B | வார்டு 4, பிளாக் எண். 20 நகரளவை எண். 1422/1 (ம) 1422/2 | 1. 55.17. 0 ச.மீ, 0. 2570. 0 சமீ, | ச. புற (களம்), ச. புற (புனித சூசையப்பர் உயர்நிலைபள்ளி விளையாட்டு மைதானம்) |
| 6. | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | நத்தம்-B கிராமம் | வார்டு 4, பிளாக் எண். 11, நகரளவை எண். 734/9 | 0.7990.0 ச.மீ, | ச. புற (நகர பகுதி) |

பார்வை(ii)-ல் கண்டுள்ள நகர சார் ஆய்வாளர் குறிப்பிற்கிணங்க, மேற்படி பட்டியலில் வரிசை எண் 1, 2, 4, 5 (பகுதி) (புல எண் 1422/1 பிளாக் எண் 20 வார்டு 4 பரப்பு 1.55.17.0 ச. மீ) வருவாய் துறை கட்டுபாட்டில் உள்ள இடங்கள் என்பதால் அரசாணை எண் G.O. (Ms) No. 97 நாள். 21.02.2025. (Revenue and Disaster Management) (L D-1) Department) மற்றும் அரசாணை எண். G.O. (Ms) No. 205 நாள். 26.04.2025 (Revenue and Disaster Management (LD-1 (1)) Department)-ன் உரிய வழிகாட்டுதலின்படி பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும், வரிசை எண். 5 (பகுதி) ( வார்டு 4, பிளாக் எண். 20 புல எண். 1422/2 பரப்பு 0.2570.0ச. மீ) இடம் நகரளவை பதிவேட்டில் ச.புற (புனித சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம்) என்ற பள்ளி நிறுவனத்தின் பெயரில் உள்ளதால் சம்மந்தப்பட்ட பள்ளி நிறுவனம் வசம் தடையின்மை பெற்று மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ள அறிவுரையின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் வரிசை எண். 3-ல் உள்ள இடங்கள் (வார்டு 2, பிளாக் எண் 2, நகரளவை எண். 392/1, 428/2, 494/1A1) நகரளவை பதிவேட்டில் ச. புற நகராட்சி பூங்கா (ம) முனிசிபல் பூங்கா என பதியபட்டுள்ளது. மேற்படி பூங்கா இடத்தை பொறுத்தவரையில் தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் (ம) திறந்தவெளி இடங்கள் பாதுகாப்பு சட்டம் 1959-ன்படி பாதுகாக்கப்பட்டு அந்த உபயோகத்திற்காக பயன்படுத்தபட வேண்டுமென சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.ANos/56/2000 & 45/2003. நாள்.12.04.2007 உத்தரவில் பூங்கா இடத்தை அதன் உபயோகத்திற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்திற்கு நகராட்சி மூலம் தடையின்மை வழங்க இயலாத நிலை உள்ளது. மேலும் வரிசை எண் 6-ல் கண்டுள்ள இடம் நகரளவை பதிவேட்டில் (வார்டு4, பிளாக் எண். 11, நகரளவை எண் 734/9 பரப்பு 0.7990.0 ச. மீ இடம் ச.புற (நகர பகுதி) என பதியப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி இடங்களில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடங்களை தவிர்த்து மீதம் உள்ள இடங்களை உரிய அரசாணையின் வழிகாட்டுதலின் படி நகராட்சி மூலம் தடையின்மை வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

பார்வை (i)-ல் கண்டுள்ள வட்டாட்சியர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் கடிதத்தில் சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் பட்டா வழங்க நகராட்சி தடையின்மை கோரபட்டுள்ள இடங்களில் வரிசை எண் 1,2,4,5 (பகுதி) வார்டு 4, பிளாக் எண். 20, நகரளவை எண் 1422/1 பரப்பு 1. 55. 17.0

ச.மீ இடங்கள் வருவாய் துறை கட்டுபாட்டில் உள்ள இடங்கள் என்பதால் அரசாணை எண். G.O. (Ms) No. 97, நாள். 21.02.2025 (ம) அரசாணை எண் G.O. (Ms) No. 205 நாள் 26.04.2025 அரசாணைகளில் உரிய வழிகாட்டுதலின் படி பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும் வரிசை எண். 5 (பகுதி) வார்டு 4, பிளாக் எண் 20, நகரளவை எண் 1422/2, பரப்பு 0.2570.0 ச. மீ இடம் நகரளவை பதிவேட்டில் ச.புற (புனித சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம்) என பதிவு உள்ளதால் சம்மந்தபட்ட பள்ளி நிறுவனம் வசம் தடையின்மை சான்று பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் வரிசை எண் 3-ல் உள்ள இடங்களில் நகரளவை பதிவேட்டில் ச.புற (நகராட்சி பூங்கா (ம) முனிசிபல் பூங்கா) என பதிவுள்ளதால் தமிழ்நாடு பூங்காக்கள் விளையாட்டு மைதானங்கள் (ம) திறந்தவெளி இடங்கள் பாதுகாப்பு சட்டம் 1959-ன் படியும் சென்னை உயர்நீதி மன்ற வழக்கு W.A. Nos/56/2000 & 45/2003. நாள்.12.04.2007 உத்தரவின் படி நகராட்சி மூலம் தடையின்மை வழங்க வழிவகை இல்லாத காரணத்தாலும் மேலும் பார்வை (vi)-ல் கண்டுள்ள வார்டு 4, பிளாக் எண். 11, நகரளவை எண். 734/9 பரப்பு 0.7990.0 ச. மீ இடம் ச.புற (நகர பகுதி) என பதிவு உள்ளது. எனவே மேற்படி இடங்களுக்கு பார்வை (i)-ல் கண்டுள்ள வட்டாட்சியர், செங்கல்பட்டு மாவட்டம் அவர்களின் கடிதத்திற்கணங்கவும் அரசாணை எண் G.O. (Ms) No. 97, நாள். 21.02.2025 (ம) அரசாணை எண் G.O. (Ms) No. 205 நாள் 26.04.2025 உரிய வழிகாட்டுதலின் படி நகராட்சி மூலம் தடையின்மை வழங்குவது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்.18, நாள்.08.07.2025**

அரசு ஆட்சேபணை அற்ற இடங்களுக்கு பட்டா வழங்கவும், ஆட்சேபணை இருக்கும் இடத்தில் மக்கள் நீண்ட காலமாக வசித்து வருவதாலும், அவர்களுக்கு வரி, மின்சார இணைப்பு, நகராட்சி குழாய் இணைப்பு உள்ளதாலும் அவர்களுக்கு பட்டா வழங்க தமிழக அரசு முடிவெடுத்த நிலையில் மாண்புமிகு திராவிட முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க 10 ஆண்டுகளுக்கு மேல் அரசு புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க இந்த மன்றம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது. திராவிட முதல்வருக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த தீர்மான நகலை அனுப்பி உடன் நடவடிக்கை எடுக்க மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது.

08/07/2025
நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி